போர் 1 | பொள்ளாச்சி. 19—7—51. | விலை அரையணு. | 6-பக்கம். | வெற்றி 23.

பீடித் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

சோஷியலிஸ்ட்களின் ஜம்பம் சாயவில்லை.

காங்கிரஸ் கமிட்டித் தலைவரின் சமரசம்.

சென்ற 22-6-51 முதல் பல்லடம் குயில்பீடி பிராஞ்ச் பொள்ளாச்சி பேக்டரி மூடியதின் நிமித்தம் பீடித்தொழிலாளர்கள் மறியல் செய்து வந்தனர். முதலாளிக்கும் தொழிலாளிகட்கும்ஏற்பட்டுள்ள தகராறில் தலையிட்டு சமரசம் செய்து வைக்கும்படி தொழிலாளர் சங்கத்தினர் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவரையும், ஸ்ரீ பி. நாச்சிமுத்துக்கவுண்டர் அவர்களையும் மற்றும் ஸ்தல காங்கிரஸ்காரர்களையும் கேட்டுக்கொண்டதின் பேரில் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீஎம். ராமசாமி கவுடர் காரியதரிசி ஸ்ரீ எஸ். காதர் மைதீன், வைஸ்சேர்மன் ஸ்ரீ ஏ ஜே எஸ் மரியதாஸ், ஸ்ரீ எம். ஆறுமுகமுதலியார் முதலியோர் 9-7-51 ல் பல்லடம் சென்று குயில்பீடி முதலாளி ஸ்ரீ பி எ. ரஹீம் சாயபு அவர்களிடம் பேசி, பீடி ஆயிரத்திற்கு 1-14-0 கூலி என்றும், அடைப்பு நாட்களுக்காக தொழிலாளர்களுக்கு உதவித்தொகை ரூ 11-0-0 என்றும் அவாடில் சேராதவர்கள் பேசி சமரசத்தை இருதரப்பாரும் ஒப்புக்கொள்ளும் தருவாயில் தொழிலாளர் சங்கத்தினரை சில சோஷயலிஸ்ட்கள் வெளியில் அழைத்துப்பேசி சமரசம் முறியும்படி செய்து விட்டனர். பஞ்சாயத்தார்கள் ஊர் திரும்பினர்.

11-7-51 மாலையில் ஸ்ரீ பி. ஆர். கந்தசாமிக்கவுண்டர் எம் எல். ஏ. யும் சில சோஷியலிஸ்ட்களும் வந்து, காங்கிரஸ் கமிட்டியாரை அழைத்தனர். சோஷியலிஸ்ட்களுடன் தாம் பேசத்தயார் இல்லை என்றும், எம். எல். ஏ. யிடமும், தொழிலாளர் சங்கக் காரியதரிசி, தலைவர் முதலியோரிடமும் மட்டும்தான் பேச்சு வார்த்தை நடத்தமுடியும் என்றும் ஸ்ரீ எம் ராமசாமிக்கவுடர் கண்டிப்பாகச் சொன்னர்

இதற்கு மத்தியில் சோஷியலிஸ்ட்கள் பல்லடம் சென்று குயில் பீடி முதலாளியிடம் கூலி 1-14-0க்கும், உதவித்தொகை 11-0-0க்கும் தாங்கள் ஒப்புக்கொள்வதாகவும் ஆனல் சமரசம் தாங்கள் செய்ததாக இருக்கவேண்டுமென்று கேட்டதாகவும், அதற்கு முதலாளி தான் ஒன்றும் செ ல்வதற்கில்லை என்றும் பொள்ளாச்சியில் காங்கிரஸ் கமிட்டியாரிடம் பேசும்படியும் சொல்லிவிட்டதாகவும், அதன் மேல் சோஷியலிஸ்ட்கள் இங்கு திருப்பிவிட்டதாகவும் ஒரு தகவல் வந்தது.

பஞ்சாயத்தார்களானநால்வரும்சோஷியலிஸ்ட்களுடன் பேச முடியாது என்று திட்டமாகச் சொல்லிவிடவே, ஸ்ரீ பி. ஆர் கந்தசாமிக்கவுண்டர் தலையிட்டு, அவர்கள் சும்மா உட்கார்ந்து கொள்ளட்டும் என்றும் அவர்களிடம் யாரும் பேசவேண்டாமென்றும், அவர்களும் பேசமாட்டார்களென்றும் சும்மா உட்கார்ந்து கொள்வதற்குமட்டும் சம்மதிக்கும்படியும் கேட்டுக்கொள்ளவே அதற்கிணங்கினர். பிறகு தொழிலாளர் சங்கத்தினரிடம் எந்தமாதிரி எழுதிவாங்க வேண்டுமென்பதை எழுதும்படி ஸ்ரீ பி. எஸ். வேலுசாமியை எம். எல். ஏ. கேட்டுக்கொண்டார். அதன்படி எழுதும்போது அவரிடம் சோஷிலிஸ்ட்கள் பஞ்சாயத்தார்கள் பெயர் எழுதும்போது அதில் காங்கிரஸ்காரர்கள் பெயர்எழுதுவதனல் தங்கள் பெயரும் எழுதவேண்டுமென்றனர்: அதற்கும் முடியாது என்றபதில் வரவே எம். எல். ஏ. தலையிட்டு சோயஷிலிஸ்ட்களை சும்மாஇருக்கும்படி சொல்லவே சரி என்று சும்மா உட்கார்ந்து கொண்டனர்.

29—6—51 முதல் அடைப்பு செய்யப்பட்டிருந்த குயில்பீடி பொள்ளாச்சி பேக்டரியை 12—7—51 முதல் திறப்பதெனவும், முதலாளி - தொழிலாளர்கடையே எழுந்த தகராறு விஷயமாய் தொழிலாளர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பஞ்சாயத்தார்களான ஸ்ரீ எம். ராமசாமி கவுடர், எஸ். காதர்மைதீன், ஏ. ஜே. எஸ். மரியதாஸ், ஆறுமுகமுதலியார் முதலியோரின் சமரசம் இரு தரப்பாரும் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றும் முடிவு செய்யப்பட்டது.

கூலி 1—14—0 என்றும் உதவித்தொகை 11-ரூபாயென்றும் இதை ஒப்புக்கொள்கிறீர்களா என்றும் ஸ்ரீ ஆறுமுக முதலியார் தொழிலாளர்களிடையே கேட்டபோது பலத்த கரகோஷத்தினிடையே தொழிலாளர்கள்

[2-ம் பக்கம் பார்க்கவும்.]

நன்றி அறிவிப்பு.

எனது குமாரத்தி சௌபாக்கியவதி லக்ஷ்மிக்கும்,
சிரஞ்சீவி V. ராஜாமணிக்கும் எனது இல்லத்தில் 13—7—51 ல்
நடந்தேறிய திருமண வைபவத்திற்கு நேரில் வந்திருந்தவர்கட்கும், ஆசி அனுப்பி
இருந்த நண்பர்கள், பந்துக்கள் அனைவருக்கும் தனித்தனியே நன்றி கூற
இயலாததால் இதன் மூலம் என் மனமார்ந்த நன்றியறிதலைத்
தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
C. L சுப்பிரமணிய அய்யர்,
புரோப். எல். எஸ். மணி அ கோ.,
பொள்ளாச்சி.

செல்வாக்கு மிகுந்த தமிழ்

வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 19—7—51. வியாழன்.

பெங்களூர் கூட்டம்.

பெங்களூரில் நடந்த அ. இ. கா. க. கூட்டம் சுமுகமாக நடந்தேறியது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். காங்கிரஸில் பெரும் பிளவு ஏற்பட்டுவிடும். அதனால் காங்கிரஸ் பலஹீனம் அடையுமென்று காங்கிஸின் விரோதிகள் எதிர்பார்த்து ஏமாந்தனர். நேருஜீ காட்டிய பெருந்தன்மையினால், பெங்களூர் கூட்டம் மிகவெற்றிகரமாகவும், சமாதானமாகவும் பரஸ்பர ஒற்றுமையோடும் நடந்திருக்கிறது. காங்கிரஸிலிருந்து வெளியேறியவர்களைத் திரும்பவும் அழைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, என்றாலும் இது நடைமுறையில் சாத்தியமானதல்ல. போனவர்கள் போகவேண்டியதுதான் ஒருகூட்டம் அவர்களை திரும்பி அழைக்கவேண்டுமென: சதா [illegible]ச்சல் காங்கிரஸிற்குள்ளேயே போட்டுப்போட்டு அவர்கள் கட்சிக்கு பலம் கொடுக்கப்பார்க்கிறது.

அதற்கு தாண்டன்ஜி விடமாட்டார். காங்கிரஸில் எப்போதும் யாரும் வந்து சேரலாம், போகலாம், அதற்காக யாரையும் வலிய வருந்தி அழைக்கவேண்டியதில்லை. மூன்றுகோடி நாலுலட்ம் மெம்பர்கள் உள்ள காங்கிரஸ் ஸ்தாபனத்தில் 2500 பேர் போய்விட்டதைக்கு [illegible]க்துப்பிரமாதப்படுத்திக் கொண்டிருக்கவேண்டியதில்லை. இதை தாண்டன்ஜி [illegible]வருகு அழகாக அ. இ. கா. க. கூட்டத்தில் எடுத்துச்சொல்லி இருக்கிறார். ஒருசில தனித்தலைவர் தங்கள் செல்வாக்குப் பலம் இல்லாமல் போய்விடுமோ என்ற பயத்தால் வீண் கலவரமடைகின்றனர். இதில் அர்த்தமே இல்லை. ஜனநாயக முறைப்படி தலைவர் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவரால் காரியக்கமிட்டி அமைக்கப்பட்டு ஜனநாயக முறைப்படி தேர்தல் கமிட்டியும் அமைக்கப்பட்டிருக்கும்போது, அதைமாற்றி அமைக்கவேண்டுமென்று சிலர் கிளர்ச்சி செய்தால் அவர்களை ஜனநாயகத்தின் விரோதிகள் என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது. அதனால்தான் அக்கிராசனர் பதவியை இராஜீனாமாச் செய்து விடுவதாக பெருந்தன்மையுடன் தாண்டன்ஜீ கூறினார். இந்த இடத்தில்தான் நேருஜீ சாமர்த்தியமாகவும், கண்ணியமாகவும் நடந்து கொண்டதினால், காங்கிரஸ் வெற்றிகரமாகமுடிந்தது. சிலர் தங்களுக்குபதவிகிடைக்காமல் போய்விடுமோ என்ற பயத்தால் அர்த்தமற்ற கூச்சல்களைக் கிளப்பிக்கொண்டிருக்கிறார்களே ஒழிய உண்மையில் கோளாறு எதுவும் இல்லை. எல்லாம் ஒழுங்காய்த்தானிருக்கிறது.

தமிழ் நாட்டில்கூட, தமிழ்நாடு காங்கிரஸில ஊழல் மலிந்துவிட்டது, தலைவர் சரியில்லை சர்க்கார் சரியில்லை நிர்வாகம்சரியிலலை மாற்றி அமைக்க வேண்டுமென்றெல்லாம், ஒரு பதவி மோகம் பிடித்த கூட்டம் ஸ்ரீ ஓ. பி. ஆர். ரெட்டியாரையும் சேர்த்து இழுத்துப் பிடித்துக்கொண்டு கூச்சல் போட்டுக்கொண்டிருந்தது. அதன் முடிவு என்ன? தேர்தலுக்கு அபேட்சகர்களை எடுக்கும் கமிட்டியில் எங்களுக்கு 7-ல் 4-ஸ்தானம் வேண்டும் என்றனர். இந்தா 3-என்றார் காமராஜ். லபக்கென்று பற்றிக்கொண்டது இந்தக்கூட்டம். அதிலிருந்து ஸ்ரீ ரெட்டியார் கழற்றிக் போய்விட்டார். ஆடு திருடிய ஆசாமிமாதிரி வ்ழித்துக்கொண்டிருக்கிறது அந்தப்பதவிப் பிரியர்கள் அடங்கிய கூட்டம். ஆகவேஎங்கும் வீண் கூச்சல் போட்டு பதவி பிடிக்க ஒரு கூட்டம் இருந்து கொண்டு தானிருக்கிறது. அதற்கு இன்று காங்கிரஸ் தலைவர்களான தாண்டன்ஜீயோ, காமராஜோ ஏமாந்து விடமாட்டார்கள் என்பது திண்ணம்.

கோவை ஜில்லா இளைஞர் காங்கிரஸ்.

21-ந் தேதி சனி காலையில் 10-மணிக்கு மத்திய சர்க்காரின் வெளி விவகார இலாகா உதவி மந்திரி டாக்டர் பி. வி. கேய்ஸ்கர் கோவை செயின்ட் மைக்கேல்ஸ் ஹைஸ்கூல் பிரிட்டோ மண்டபத்தில் மாணவர்களையும், இளைஞர் காங்கிரஸ் ஊழியர்களையும் சந்தித்துப்பேசுவார். அன்று மாலை 6-மணிக்குடவுன் ஹால் மைதானத்தில் ஸ்ரீ வி. சி. பழனிசாமிக்கவுண்டர் தலைமையில் டாக்டர் கேய்ஸ்கர் அவர்களும், ஆர். வெங்கட்ராமன் எம். பி. அவர்களும் பொதுக்கூட்டத்தில் பேசுவார் என்று ஜில்லா இளைஞர் காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ கே. ராஜகோபால் அவர்கள் தெரிவிக்கிறார்.

மந்திரிகள் விஜயம்.

17—7—51 ல் இந்திய சர்க்காரின் தொழிலாளர் மந்திரி ஜகஜீவன்ராம் சென்னை சர்க்கார் மந்திரி ஸ்ரீ பரமேஸ்வரன் அகில இந்திய தேசீய தொழிற்சங்க காங்கிரஸ தலைவர் ஸ்ரீ கந்துபாய் தேசாய், ஸ்ரீ இராமானுஜம் மற்றும் பல தலைவர்கள் பொள்ளாச்சி வழியாய் வால்பாரைக்குச் சென்றனர். அங்கு நடைபெற்ற தொழிலாளர் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

சங்கத்திற்கு விஜயம்.

பொள்ளாச்சி தேசீய மோட்டார் தொழிலாளர் சங்கத்திற்கு ஸ்ரீ கந்துபாய் தேசாய், இராமானுஜம் முதலியோர் 17-ம் தேதிகாலை 10-மணிக்கு விஜயம் செய்தனர். சங்கத்தலைவர் மாலையிட்டு வரவேற்றார். ஸ்ரீ பி. நாச்சிமுத்துக்கவுண்டர் கூடயிருந்த தலைவர்களுக்கு வரவேற்புச்கொடுத்தார். கந்துபாய் பேசியபின் இராமானுஜம் சங்கத்தைப்பற்றி விளக்கிக் கூறினார். நன்றி கூறிய பின் தலைவர்கள் வால்பாரைக்கு சென்றனர்:

[முதல் பக்கம் தொடர்ச்சி.]

ஒப்புக்கொள்ளுகிறோம் என்று மூன்றுதடவை அறிவித்தனர். பிறகு சமரசத்துடன் சந்தோஷமாக இரவு 12-மணிக்கு எல்லோரும் வீடு திரும்பினர். அடுத்த நாள் மாலை ஸ்ரீ பி ஆர். கந்தசாமிக்கவுண்டர் எம். எல். ஏ., பி. எஸ். வேலுசாமி, தொழிலாளர் சங்கத் தலைவர் முதலியோர் இருந்து உதவித் தொகையை தொழிலாளர்கட்குகொடுத்தனர்: இப்போது பேக்டரி திறக்கப்பட்டு சந்தோஷமாக எல்லோரும் வேலை செய்கின்றனர். தொழிலாளிகளின் குடும்பம் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளன:

கண்டியம்மன் கம்பெனி,

கோயமுத்தூர் ரோடு,

மோட்டார், ஆயில் எஞ்சின், பம்ப் செட்கள், எலக்ட்ரிக் சாமான்கள், மற்றும் மெஷினரி சாமான்களும் குறைந்த விலையில் எங்கள் கம்பெனியில் கிடைக்கும்.

உரிமையாளர்:

C. ரங்கசாமிக்கவுண்டர்.

"லக்க ஜோசியம்"

கா வருஷ பலன் விலை அணா 12.

வேண்டுவோர்: லக்கஜோஸியம்,

453, ஹை ரோடு, சென்னை.

(என்ற விலாசத்திற்கு எழுதவும்)

பொள்ளாச்சி வாசி ஆபீஸிலும் கிடைக்கும்.

இளைஞர் காங்கிரஸ்.

13-ம் தேதி வெள்ளி மாலையில் இமாம்கான்வீதியிலிருக்கும் இளைஞர் காங்கிரஸ் அலுவலகத்தில் ஜில்லா கமிட்டி அங்கத்தினர் அ. முத்துசாமி தலைமையில் இளைஞர் காங்கிரஸ் சொற்பொழிவுக்கூட்டம் நடைபெற்றது.

இளைஞர் உலகம் என்பது பற்றி பொ. ந. வாசுதேவன், மாணவர்கள், க. சந்திரசேகரன், அ. ராமச்சந்திரன், வடுகபாளையம்இளங்கதிர், காரியதரிசி அ. பாசித், ஆகியோர் வெகுவிரிவாகப் பேசினார்கள். இளைஞர்கள் ஒவ்வொருவரும் நாட்டிற்கு இன்று செய்ய வேண்டிய கடமையும், தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் கூறியது போல் ஒவ்வொருவரும் உழைப்பவர்களாக மாற வேண்டுமென்றும், இளைஞர்களையெல்லாம் ஒன்றுதிரட்டி இளைஞர் காங்கிரஸ் ஸ்தாபனத்தை பலப்படுத்த வேண்டுமென்றும் பேசினார்கள். தலைவர்முடிவுரைக்குப்பின் காரியதரிசி நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

முத்தமிழ் வளர்ச்சிக்கழகம்.

9-ம் தேதி வடுகபாளையம் முத்தமிழ் வளர்ச்சிக்கழக கமிட்டிக்கூட்டம் தலைவர் ஸ்ரீ வி. கே பழனிச்சாமிக்கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. முதலில் கமிட்டி அங்கத்தினர்கள் உறுதிமொழி மேற்கொண்டனர். ஷை கழகத்திற்கு ஆண்டுசந்தா ஒரு ரூபாயாக நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. மற்றும் பல நிர்வாகத் தீர்மானங்களுடன் கூட்டம் முடிவுற்றது.

மாணவர் உல்லாசம்.

13-ம் தேதி வெள்ளிக்கிழமை நம்நகர சமத்தூர் ராமப்பய்யங்கார் உயர்நிலைப்பள்ளி 4, 5-ம் படிவ மாணவர்கள் ஷை பள்ளி நெசவு ஆசிரியர் ஸ்ரீ ஜேக் மருதபாண்டியன் தலைமையில் உடுமலைப்பேட்டைக்கு உல்லாசப்பிரயாணம் சென்றனர். அங்கு வெங்கடேஸ்வர நூல் மில்லை பார்வையிட்டனர். மாணவர்களுக்கு நுட்பமான இயந்திரங்களைப்பற்றி ஆசிரியரும் மில்லைச்சேர்ந்த நிர்வாகிகளும், தொழிலாளர்களும் விளக்கமாக எடுத்துக்கூறினார்கள். பின்னர் 16-ம் தேதி திங்கட்கிழமை ஷை பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் ஸ்ரீ ஞானக்கண்ணு ஜேக்மருதபாண்டியன் இவர்கள் தலைமையில் வால்பாறைக்குச்சென்று அங்கு ரோப்வே, வண்ணாந்துறைகோயில் அட்டகட்டி, அய்யர்பாடி, வால்பாறை முதலிய இடங்களைப்பார்த்துவிட்டு பொள்ளாச்சி திரும்பினர்.

பாரதி!

"இளங்கதிர்"

அடிமை யறுத்த கவியவன்
ஆண்மை தந்த கவியவன்
படி மிசை தமிழ் முழக்கியே
பாரதி புகழ் நாட்டினன்.
ஆங்கிலங் கற்ற நிலையிலே
ஆற்றல் விட்ட நிலையிலே
ஏங்கிய மக்கள் வாழ்ந்திட :
ஏக்கம் போக்க வந்தவன்.
ஐயன் தமிழன் பாரதி
ஐயமில்லா நலச் சாரதி
உயர்வின் சுடர்க் கவியன்
உண்மை கூறும் கவியன்
புகழ் மறையா பாரதி
புன்மை ஒளித்த நாளையே
இகழ்ந்து வாழும் கூட்டமும்
இருத்தல் சரியோ, சொல்வீர்?

கோவை ஜில்லா காங்கிரஸ் ஊழியர் கூட்டம்,

நாளது 21-7-51ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3-மணிக்கு கோவை ஒப் எம். வி. ஏ ஹாலில் ஜில்லா காங்கிரஸ் ஊழியர் கூட்டம் நடைபெறும். அது சமயம் மத்திய சர்க்காரின் வெளிநாட்டு இலாகா உதவி மந்திரி கனம் டாக்டர் பி. வி. கேய்ஸ்கர் அவர்கள் பேசுவார் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமாய்ஜில்லாகாரியதரிசி ஸ்ரீ பி. எஸ். ரங்கசாமி அவர்கள் தெரிவிக்கிறார்.

—O—

கம்யூனிஸ்ட்களின் தேர்தல் ஒப்பாரி.

ஜூலை 15-ம் தேதி மாலை தேர்நிலை வெளியில் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர். ராமலிங்கம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. முதலில் சி. ப. கந்தசாமி சில தீர்மானங்களைப்பற்றி பேசினார். பின்னர் கட்சியின் தேர்தல் கொள்கைகளைப்பற்றி கோவை கோவிந்தன், எல். பழனிச்சாமி ஆகியோர் பேசிய பின்னர் கூட்டம் முடிவுற்றது.

நேயர் தபால்!

(சுகாதார அதிகாரிகளுக்கு)

நமது பொள்ளாச்சி நகரிலே ஒரு சில பார்பர் ஷாப்புகளில் வெல்ல நுரை, குங்கிலியம், த... ீர், அல்லது தெளிந்த சுண்ணாம்புத்தண்ணீர் போதப்புல்தைலம் இதுபோன்ற சாதனங்களை சேர்த்து லைம் ஜூஸ் என்னும் கூந்தல்தைலம் அங்கு வரும் பொதுமக்களின் தலையில் தேய்க்கிறார்கள். இதில் கெடுதல் இருக்கிறதென்று என் அபிப்பிராயம். இதை சுகாதார அதிகாரிகள் பரிசீலனை செய்து அதில் கெடுதல் இருந்தால் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

(மா. பொன்மலை.)

தண்ணீர்குழாய்தேவை.

நம்நகர கோவை ரோட்டில் 4, 5-வீதிகளிருக்கின்றன. இருந்தாலும் அந்தப்பக்கம் பழனியப்பமுதலியார் வீதியில் ஒரே ஒரு குழாய் தானிருக்கிறது. வேறு வீதியில் குழாயே கிடையாது. அப்பக்கங்களில் குழாய் இல்லாததால் ஜனங்களுக்கு தண்ணீர் சௌகரியம் கிடையாது. அந்த ஒரே பைப்பில்தான் தண்ணீர் பிடிக்கலாமென்றால் காலைமுதல் இரவு வெகுநேரம் வரை ஒரே கூட்டம் தான். குழாய் சண்டையும் உண்டாகி விடுகிறது ஆகையால் கூடுமானவரையில் அந்த வீதிகளுக்கு தண்ணீர் குழாய் அவசியம் போடவேண்டுமாய் நம் நகர சபையாருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(ஏ. நாகராஜன்.)

சந்திரன் காலேஜ் ஸ்கூல்.
298, இடையர் வீதி, கோயமுத்தூர்.
ஒரு வருஷத்தில் 14-வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C. க்கும், 20-வயதுக்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். E. S. L. C. இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.
தலைவர்:- S. R. Chandran.

நாளது 21-ம் தேதி சனிமாலை 3-மணிக்கு ஹரிஜன ஹாஸ்டலில் மாணவர் சொற்பொழிவு மன்ற 2-வது ஆண்டு ஆரம்ப விழாவை ஸ்ரீ வி. டி. டைட்டஸ் ஆரம்பித்து வைப்பார்

போன் நெம்பர். 63.

கிருபா ஜுவல்லரி மார்ட்
Pro: S.G. சந்தானகோபாலன் செட்டியார்
ESTD. 1938
பொள்ளாச்சி

உத்திரவாதத்துடன் பவுன் நகைகளும்,
வெள்ளிப்பாத்திரங்களும் கிடைக்குமிடம்

தபால் பெட்டி நெ. 25.

RAMAKRISHNA JEWELLERY MART
Phone No. 53

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத் துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

உலகப் பிரசித்திபெற்ற பல்லடம்

உரிமையாளர்:
P. A. ரஹீம் சாயபு,
பல்லடம்.

ஏஜண்ட்:
A. K. யாகூப் சாயபு,
பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி
உபயோகியுங்கள்.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட்,
நாகமாணிக்கம் செட்டியார் & பிரதர்,
கடை வீதி.

மாடர்ன் கபே,
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

S. P. M. கொடி மஜீத் பீடி,
அங்கு விலாஸ் கடை,
ஏஜண்டு: A. S. B. செட்டியார்.

S. R. V. லாட்ஜிங் ஹௌஸ்
சுகாதார முறைப்படி நல்லகாற்றோட்டமுள்ள ரூம்கள் வாடகைக்கு விடப்படும்

உங்கள் அபிமானம் பெற்ற
M. குமாரவேல்த்தேவர்,
புஷ்ப வியாபாரம் கடைவீதி.

ஓர் வேண்டுகோள்.

குறைந்த வாடகையில் மின்சார விளக்குகள் ஒலிபெருக்கி, மின்சாரம் இல்லாத இடங்களில் அமைத்துக் கொடுக்கப்படும்.

M. சுப்பையகவுண்டர்,
தலைவர்,
மோட்டார் தொழிலாளர் சங்கம்,
பொள்ளாச்சி.

படித்துப் பாருங்கள்.

"முத்தமிழ்ச்சோலை"

(ஆடி இதழ்)

கருப்புக் கோட்டை இடியும் கற்பனைச் சித்திரம், களிப்பூட்டும் கனிவுள்ள கதைகள்! திராவிடத்தாரைத் தினாடிக்கும் சாட்டையடி! தித்திப்பான தீஞ்சுவைக் கவிதைகள்! நாமம் நக்கிகளை நடுங்கவைக்கும் நல்லபதில்! பாயும் கேள்விக்கணைகள்! மற்றும் பல!

விலை 4—அணா வருட சந்தா 3—ரூ

தாலூகா, நகரச்சுற்றுவட்டாரத்தில் முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

விவரங்களுக்கு,
முத்தமிழ்ச்சோலைப் பதிப்பகம்,
பொள்ளாச்சி.

சுடச்சுட!

(அ பாசித்.)

● என் கடன் பணி செய்து கிடப்பதே. (ஒரு பிரசங்கி.)

என் பணி கடன் செய்து கிடப்பதே என்கிறார் ஒரு குடும்பஸ்தர்.

● கதர் போர்வையில் கள்ளர்கள். (போர் வாள்.)

கள்ளர்கள் கதர் போர்வையில் வரமாட்டார்கள். கருப்புப் போர்வையில் தானே வருவார்கள்.

● கண்ட்ரோல்களை ஒழிக்குமாறு ஸ்ரீ வி. சி. பழனிசாமிக் கவுண்டர் வேண்டுகோள்

(ஒரு மகாநாட்டில்.)

கண்ட்ரோல்களை ஒழித்துவிட்டால், ஒளித்திருந்தவைகளை வெளியே எடுத்து மேலும் கொள்ளை யடிக்கலாமென்று கும்மாளம் போடுகிறார் ஒரு பிளாக் மார்க்கட் ஆசாமி.

● போதும் காமராஜரே புலம்பாதீர்கள். (ஞாயிறு)

அவர் புலம்பினால் என் இந்தக் கருநாய்களெல்லாம் குலைக்கவேண்டும்!

● வோட் கேட்காத கட்சி எங்கள் இயக்கமே. [அண்ணாத்துரை.]

வோட் கேட்டால் மக்கள் நிச்சயமாக இவர்களுக்கு ஒடு கொடுப்பார்கள் என்கிறார் ஒரு தமிழரசு வாதி!

● மனிதனைமிருகமாக்கியதுகாங்கிரஸ் ஆட்சி. நேருவின் கூற்று என்னவாயிற்று. அனுபவமில்லாதவர் ஆளமுடியாது. (அண்ணாத்துரை.)

மனிதனை மனிதனாக்கியது காங்கிரஸ் ஆட்சி. ஆளும் அனுபவம் அண்ணாத்துரைக்கு இருக்கிறதா என்று கேட்கிறார் ஒரு அரசியல் வாதி.

○ பாரத புத்திரர்கள் ஆட்சியில் எட்டு முறை சிறை சென்றவரும் திராவிடன் ஆசிரியருமான தோழர் என். வி. நடராசன் பேசுவார் (ஒரு நோட்டீஸ்.)

எட்டு முறை சிறை சென்றவர் எட்டு மணி நேரம் சிறையிலிருந்தாரா? எட்டு நாள் எட்டு முறை மட்டும் சிறை சென்றாரா? எப்படித்தான் சென்றாரோ! ஐயோ பாவம் என்று பச்சாதாபப்படுகிறார்எட்டு முறை சிறை சென்ற பிக்பாக்கெட்காரர்!

○ அழகான தாடி வளர்ப்பவருக்குப் பரிசு. [வாஷிங்டன் செய்தி]

அப்படியானால் ஈ. வெ. ரா. வை சி...ர்சு செய்யுங்கள் என்கிறார் நம் கம்பா...டர்.

○ சி. என். காம்படிஷன்ஸ் என் போட்டிப்பந்தயம் நடத்தி ஏமாற்றி... நாம். மதுரையில் ஒருவர் கைது. [செய்தி.]

போட்டி நடத்தியதில் போ... பெட்டியும் கிடைத்திருக்கிறது.

○ ரேஷன்கார்டு உள்ளவர்களுக்கா... ரேஷன் யூனிட் ஏறினாலும் குறைந்தாலு... அந்த அளவில் ரேஷன் மட்டும் எப்பே... தும் கடவுளுக்கு 6-அவுன்ஸாகஇருக்கு... (ஒரு அறிக்கை)

இந்த கவர்மெண்ட் கடவுளுக்குக்கூ... ரேஷன் கொடுக்கிறதேஎன்று கத்துகிறா... ஒரு கருப்புச் சட்டைக்காரர்.

அன்பளிப்பு!

13–7–51 ம் தேதி எல். எஸ். மணி ... ரத்தி லட்சுமிக்கும் வி. ராஜாமணிக்... திருமணம் சிறப்பாக நடைபெற்றபோ... ஏராளமான நண்பர்கள் பந்துக்கள் வ... ருந்து தம்பதிகளை ஆசீர்வதித்துப்பா... கள் வழங்கினர். அதுசமயம் மணம... தந்தை ஸ்ரீ எல். எஸ். மணி பொள்ளாச்... வாசியின் வளர்ச்சிக்காக ரூ. 10—0—0 ... கொடையாக லட்சுமியின் திருமணத்... முன்னிட்டு அளித்தார்.

விளம்பர விகிதம்.

"பொள்ளாச்சி வாசியின் சர்குலே... நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்... போவதாலும், நியூஸ் பிரிண்ட் விலை ... கரித்து விட்டதாலும், பக்கங்கள் அதி... படுத்தி இருப்பதாலும் விளம்பர விகி... கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டி... றது.

ஒரு பக்கம் தடவைக்கு		ரூ.
அரைப்பக்கம்	,,	ரூ.
கால் பக்கம்	,,	ரூ.
ஒரு காலம்	,,	ரூ.
ஒரு காலத்தில் ஒரு அங்குலம்		ரூ.

மானேஜர்.

பொள்ளாச்சி வாசி...
லக் சந்தா ஜோசியம்
எதிர்பாருங்க...

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்.

அறிவிப்பு.

உறுதிக்கும், நேர்த்தியான வேலைப்பாட்டிற்கும்,
சிக்கனத்திற்கும் உத்திரவாதமுள்ள

டால்மியா போர்ட்லண்டு

சிமிட்டியை

யாவரும் எளிதில் பெற்று உபயோகிக்கும் பொருட்டு

பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை,
பழனி

ஆகிய இடங்களில் கடைகள்
திறக்கப்பட்டிருக்கின்றன.

நா. மகாலிங்கம்,

டால்மியா சிமிட்டி ஏஜண்டு, பொள்ளாச்சி.

கேள்வி—பதில்.

கே: சிலர் கேட்கும் கேள்விகளுக்கு தாங்கள் மரியாதையில்லாமல் பதில் கூறுவதின் நோக்கம் என்ன?

(வெங்கிட்டு)

ப: அர்த்தமற்ற ஆபாசமாக அனுவசியமான கேள்விகளை மரியாதையில்லாமல் டத்தனமாகக் கேட்கும் முட்டாள்களு கு மரியாதையில்லாமல் பதில் கொடுத்தால் மறுமுறை அம்மாதிரி கேள்விகள் கேட்கமாட்டார்கள் தெரிந்ததா?

நே: நமது நகரில் அக்கிரமமும், ஆபாசச் செயல் புரியும் நாட்டு நன்மையறியா லுத்தர்களைப்பற்றி தக்கமுறையில் எழுதியனுப்பலாமா?

(யு வி. ரகுபதி)

ப. தகுந்த ஆதாரங்களுடன் எழுதிய ப்பினல் தாராளமாகப் பிரசுரிக்கப்படும்.

கே: திராவிடக்கழகத்தார் முஸ்லீம்களுக்கு பிரியாணி போடுவதால் தான் அவ கள் சமூகத்தில் சேருகின்றனர் என்று னைப் ஷம்சுதீன் அன்று கூறினாரே, அப் படியென்றால் இந்த மனிதர் பிரியாணிக்கு வேண்டி மானத்தை இழந்து வாழ்ந்தாரா, இது நாள் வரை? பிரியாணி சரிவர கிடைப்பதில்லை இப்பொழுது என்ற காரணத்திற்காக விலகினாரா? (சீனிவாசன்)

ப: மானத்தை இழந்து வாழ்பவன் மனிதனல்ல! திராவிட இயக்கம் பிரியாணியியக்கமாக மாறிவிடவே அவர் தன் மானத்திற்காக சுயமரியாதைக்காக கழகத்திலிருந்து விலகி இருக்கிறார்.

கே: தென்னாட்டின் பெர்னாட்ஷா எங்கள் அண்ணாத்துரை என்று ஒருவர் பொதுக்கூட்டத்தில் பேசினாரே, அப்படியானல் மருந்துகொடுத்து மங்கையை மானம் கெடுப்பது எப்படி என்பதை ஒரு கதையால் மக்களுக்கு போதனை செய்வோனை பகுத்தறிவிழந்து பாபுஜியை காரணம் காட்டாது காமலோலன் என்ற கருத்தோடு கூப்பிடுவோனை — பெண்மையின் கற்பைப்பாதுகாத்து வாழ்வோரை பரத்தைகள் என்றும் பகர்ந்த ஒரு பண்பற்றவனை — வேசிகள் வீடுதோறும் ஒருவயோதிகனைத் தலைவனாகக்கூறிக்கொள்ளும்ஒரு தன்மானமற்றவனை — கூறிய சொல்லைதன் வாழ்க்கையால் கடைப்பிடித்துக் காட்ட முடியாத ஒரு கபோதியைப் பண்பிலும் பெருமையிலும் உயர்ந்த பெர்னாட்ஷாவோடு எங்ஙனம் ஒப்பிடலாம்? காமலீலைப்போதகன் ஒருவனைக் கல்வியின் குன்றேறிய பெர்னாட்ஷா வோடு எப்படி ஒப்பிட முடியும். இவரா தென்னாட்டின் பெர்னாட்ஷா?

(ஏ. முத்துசாமி.)

ப: போர்முனையே கண்டிராதவரைத் தளபதி என்றும், நடிப்பு என்பது என்ன என்று தெரியாதவரை நடிப்புப் புலவர் என்றும், கூறிக்கொள்ளும் கொள்கையற்றவர்கள் மேல் நாட்டின் எந்த அறிஞருக்கு ஒப்பிட்டாலும் நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

கே: திராவிடமுன்னேற்றக் கழகத்தினர் தேர்தலில் நிற்க மாட்டோம் என்று கூறினர்களே! அவர்கள் கட்சிப் பெயரை சொல்லாமல் சுயேட்சையாகநிற்பார்களா? அல்லது வேறு கட்சியின் பெயரைச்சொல்லி நிற்பார்களா?

(ஏ. ராமசாமி)

ப: பச்சோந்திகளின் நிறம் எப்படி மாறுமோ, யாருக்குத் தெரியும்!

கே: ஸ்ரீ ஆதித்தன் காங்கிரஸிலிருந்து வெளியேற்றக் காரணம் என்ன?

(ஏ. எஸ்- மணி.)

ப: அவர் காங்கிரஸில் ஆதிக்கம்செலுத்த விரும்பியதால் தான்!

Edited & Published by F. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.